# ஆர்ய தரிசனம்

## ஓர் கனவு

ராகம்: ஸ்ரீராகம்  தாளம்: ஆதி

கனவென்ன கனவே — என்றன்
கண் துயிலாது நனவினிலே யுற்ற (கனவென்ன)

1. கானகங் கண்டேன் — அடர்
கானகங் கண்டேன் — உச்சி
வானகத்தே வட்ட மதியொளி கண்டேன். (கனவென்ன)

2. பொற்றிருக் குன்றம் — அங்கொர்
பொற்றிருக் குன்றம் — அதைச்
சுற்றி யிருக்கும் சுனைகளும் பொய்கையும். (கனவென்ன)

## புத்த தரிசனம்

3. குன்றத்தின் மீதே — அந்தக்
குன்றத்தின் மீதே — தனி
நின்றதொர் ஆல நெடுமரங் கண்டேன். (கனவென்ன)

4. பொன்மரத்தின் கீழ் — அந்தப்
பொன்மரத்தின் கீழ் — வெறும்
சின்மய மானதோர் தேவன் இருந்தனன். (கனவென்ன)

5. புத்த பகவன் — எங்கள்
புத்த பகவன் — அவன்
சுத்தமெய்ஞ் ஞானச் சுடர்முகம் கண்டேன். (கனவென்ன)

6. காந்தியைப் பார்த்தேன் — அவன்
காந்தியைப் பார்த்தேன் — உப
சாந்தியில் மூழ்கித் ததும்பிக் குளித்தனன். (கனவென்ன)

7. ஈதுநல் விந்தை! — என்னை
ஈதுநல் விந்தை! — புத்தன்
சோதி மறைந்திருள் துன்னிடக் கண்டனன். (கனவென்ன)

8. பாய்ந்ததங் கொளியே — பின்னும்
பாய்ந்ததங் கொளியே — இருள்
தேய்ந்ததென் மேனி சிலிர்த்திடக் கண்டேன். (கனவென்ன)

9. குன்றத்தின் மீதே — அந்தக்
குன்றத்தின் மீதே — தனி
நின்றபொற் றேரும் பரிகளும் கண்டேன். (கனவென்ன)

10. தேரின்முன் பாகன் — மணித்
தேரின்முன் பாகன் — அவன்
சீரினைக் கண்டு திகைத்து நின்றேனிந்தக் (கனவென்ன)

11. ஓமென்ற மொழியும் — அவன்
ஓமென்ற மொழியும் — நீலக்
காமன்ற னுருவு மவ் வீமன்றன் திறலும் (கனவென்ன)

12. அருள்பொங்கும் விழியும் — தெய்வ
அருள்பொங்கும் விழியும் — காணில்
இருள்பொங்கு நெஞ்சினர் வெருள்பொங்கும் திகிரியும்
(கனவென்ன)

22. கண்ணனைக் கண்டேன் — எங்கள்
கண்ணனைக் கண்டேன் — மணி
வண்ணனை ஞான மலையினைக் கண்டேன். (கனவென்ன)

14. சேனைகள் தோன்றும் — வெள்ளச்
சேனைகள் தோன்றும் — பரி
யானையும் தேரும் அளவில தோன்றும். (கனவென்ன)

15. கண்ணனற் றேரில் — நீலக்
கண்ணனற் றேரில் — மிக
எண்ணயர்ந்தா னொர் இளைஞனைக் கண்டேன். (கனவென்ன)

16. விசையன்கொல் இவனே — விறல்
விசையன்கொல் இவனே — நனி
இசையு நன் கிசையுமிங் கிவனுக்கிந் நாமம். (விசையன்)

17. வீரிய வடிவம்! — என்ன
வீரிய வடிவம்! — இந்த
ஆரியன் நெஞ்சம் அயர்ந்ததென் விந்தை! (விசையன்)

18. பெற்றதென் பேறே — செவி
பெற்றதென் பேறே — அந்தக்
கொற்றவன் சொற்கள் செவியுறக் கொண்டேன். (கனவென்ன)

19. "வெற்றியை வேண்டேன் — ஐய!
வெற்றியை வேண்டேன் — உயிர்
அற்றிடுமேனும் அவர்தமைத் தீண்டேன். (வெற்றியை)

20. “சுற்றங் கொல்வேனோ? — என்றன்
சுற்றங் கொல்வேனோ? — கிளை
அற்றபின் செய்யும் அரசுமொர் அரசோ?” (வெற்றியை)

21. மிஞ்சிய அருளால் — மித
மிஞ்சிய அருளால் — அந்த
வெஞ்சிலை வீரன் பலசொல் விரித்தான். (கனவென்ன)

22. இம்மொழி கேட்டான் — கண்ணன்
இம்மொழி கேட்டான் — ஐயன்
செம்மலர் வதனத்திற் சிறுநகை பூத்தான். (கனவென்ன)

23. “வில்லினை எடடா! — கையில்
வில்லினை எடடா! — அந்தப்
புல்லியர் கூட்டத்தைப் பூழ்தி செய்திடடா. (வில்லினை)

24. “வாடி நில்லாதே — மனம்
வாடி நில்லாதே — வெறும்
பேடியர் ஞானப் பிதற்றல் சொல்லாதே. (வில்லினை)

25. “ஒன்றுள துண்மை — என்றும்
ஒன்றுள துண்மை — அதைக்
கொன்றி டொணாது குறைத்த லொண்ணாது. (வில்லினை)

26. “துன்பமு மில்லை — கொடுந்
துன்பமு மில்லை — அதில்
இன்பமு மில்லை பிறப்பிறப் பில்லை. (வில்லினை)

28. “படைகளுந் தீண்டா — அதைப்
படைகளுந் தீண்டா — அனல்
சுடவு மொண்ணாது புனல் நனையாது. (வில்லினை)

28. “செய்தலுன் கடனே — அறம்
செய்தலுன் கடனே — அதில்
எய்துறும் விளைவினில் எண்ணம் வைக்காதே.” (வில்லினை)